IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.206/2010
DEPOSITION OF WITNESS

ஆரம்ப நேரம்: 4.15PM.வா.சா. 1சாட்சி செந்தில் த.பெ. பழனிச்சாமி என்ற ராஜா

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif (FAC) on 23.07.2025 in accordance with the provisions of Act XX141.**

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :

1. அசல் வழக்கை முதலில் எனது தகப்பனார்தான் தாக்கல் செய்தார் என்றால் சரிதான். எனது தகப்பனார் இறந்த பிறகு நானும் எனது தாயாரும் மற்றும் எனது சகோதரியும் வாதிகளாக சேர்க்கப்பட்டோம் என்றால் சரிதான். வழக்கிடை சொத்து சர்வே எண்.115/3 ல் கட்டுப்பட்டது என்றால் சரிதான். ஆதியில் எனது பாட்டனார் சுப்பையாசேர்வைக்கு 1925ம் வருடம் நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் பாகம் பிரித்து கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி நீதிமன்ற தீர்ப்பின் படி சர்வே எண்.115/3 என்ற மொத்த சொத்தில் மேல்புறம் 41 செண்டு எனது பாட்டனார்க்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான்.

2. எனது பாட்டனார் இறந்த பிறகு மேற்படி சொத்தை எனது பாட்டி செல்லம்மாள் பராமரித்து வந்தார் என்றால் சரிதான். எனது தகப்பனாரும், எனது பாட்டியும் சேர்ந்துதான் மேற்படி சொத்தை பிளாட் போட்டு விற்றார்கள் என்றால் சரிதான். பிளாட் போட்டு விற்ற வரைபடத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அது பற்றி தெரியாது. பிளாட் போட்டு விற்ற வரைபடத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் எனது வழக்கிற்கு பாதகமாக இருக்கும் என்ற காரணத்தினால் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

3. பிரதிவாதி கிரையம் பெற்ற சொத்து சர்வே எண்.115/3 ல் எனது பாட்டனாருக்கு ஒதுக்கப்பட்ட மொத்த சொத்தில் ஒரு பாகம் என்றால் சரிதான். சர்வே எண். 115/3ல் கட்டுப்பட்ட 1 ஏக்கர் 22 செண்டு இடத்திற்கும் எனது தகப்பனார் பெயரிலும், பிரதிவாதியின் முன் பாத்தியஸ்தர்கள் மற்றும் கிரையதாரர்கள் பெயரிலும் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பட்டா நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

4. எனது தகப்பனாரும், பாட்டி செல்லம்மாளும் மொத்த சொத்தை எப்போது பிளாட்டுகளாக பிரித்தார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. எனது பாட்டி செல்லம்மாள், எனது தகப்பனார் மற்றும் ராக்குபிள்ளை ஆகியோர்கள் இணைந்து பிரதிவாதி தற்போது கிரையம் பெற்ற சொத்தை முதலில் ரத்தினசாமி என்பவருக்கு கிரையம் கொடுத்தார்கள் என்றால் ராக்குபிள்ளை பற்றி தெரியாது. எனது பாட்டி செல்லம்மாளும், எனது தகப்பனார் இணைந்து கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் தெரியாது.

5. எனது பாட்டி செல்லம்மாள் 1958ம் வருடம் தான செட்டில்மெண்டு கொடுத்துள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தான செட்டில்மெண்டு பத்திரப்படி ராக்குப்பிள்ளைக்கும் பாத்தியப்பட்டது என்றால் தெரியாது. ராக்குபிள்ளையை இவ்வழக்கில் ஒரு தரப்பினாராக சேர்க்காத காரணத்தினால் உரிய தரப்பினரை வழக்கில் சேர்க்காத காரணத்தினால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

6. வழக்கில் இடையூறு செய்யகூடாது என்ற பரிகாரம் மட்டும்தான் கேட்டுள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதியின் முன்பாத்தியஸ்தர்கள்

கிரைய பத்திரங்களில் கவனக்குறைவாக வடக்கே பொதுபாதை என தவறாக தாவா சொத்தை குறிப்பிட்டுள்ளதை ஆஸ்தபமாக கொண்டு இடையூறு செய்ததாக வழக்குரையிலும் நிரூபண வாக்குமூலத்திலும் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

7. தகப்பனார் கொடுத்த கிரைய பத்திரத்தையோ, ரத்தினசாமி எழுதிகொடுத்த கிரைய பத்திரத்தையோ அதில் உள்ள நான்குமால் தவறு என்று கூறி மேற்படி பத்திரங்களை ரத்து செய்ய பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரிதான். நானும் எனது தகப்பனார் மற்றும் எனது சகோதரி கார்த்திகா மூவரும் சேர்ந்து சர்வே எண்.115/3ல் 405 ச.அடி இடத்தில் பிரதிவாதிக்கு 21.09.2007ம் தேதி கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் 21.09.2007ம் தேதியிட்ட கிரைய பத்திரத்தின் நகல்தான் என்றால் சரிதான். (மேற்படி ஆவணம் நகலாக இருப்பதால் ஆவணமாக நீதிமன்றத்தில் குறியீடு செய்யப்படவில்லை.) ஏற்கனவே நடைபாதைக்கு போடப்பட்டிருக்கும் 21 அடி அகல பொதுபாதைக்கும் தெற்கு என சொத்து விபரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் நான்குமால் தவறாக போடப்பட்டுள்ளது.

8. மேற்படி பத்திரத்தை குறித்து வழக்கில் எங்கேயும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். பத்திரத்தில் போடப்பட்ட நான்குமால் தவறு என்று இந்த வழக்கிலோ அல்லது தனி வழக்கோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னுடைய தகப்பனார் 1966ம் வருடம் பிரதிவாதியின் முன்பாத்தியஸ்தர்களுக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

9. மேற்படி பத்திரத்தில் நான் நடைபாதை போடப்பட்டிருக்கும் 21 அடி வீதிக்கும் தெற்கே என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1966ம் ஆண்டு முதல் வழக்கிடை சொத்து பொது பாதையாகத்தான் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் அறிக்கையுடன் தாக்கல் செய்த சர்வே எண்.115 க்குரிய வரைபடம் என்றால் சரிதான்.

10. நான் தாக்கல் செய்த சொத்து விபரம் வடக்கு சர்வே எண்.119 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆணையரால் தாக்கல் செய்யப்பட்ட வரைபடம் சர்வே எண்.115 ற்குரிய வரைபடத்தின் சர்வே எண்.119க்கும் சர்வே எண்.115/3 ற்கும் இடையே பாதை பிரித்து காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

11. எனது தகப்பனார் 1966ம் வருடமே வழக்கிடை சொத்து பொது பாதையாக பிரித்து பிளாட் போட்டு விற்பனை செய்ததன் அடிப்படையில் வருவாய்துறை ஆவணமாக சர்வே எண்.115ற்குரிய வரைபடத்தின் வழக்கிடை சொத்து பொதுப்பாதையாக குறிப்பிடப்பட்டு நடைமுறையில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல.

12. எனது தகப்பனார் கிரையம் கொடுத்த 1966 வருட பாத்திரத்தில் எனது தகப்பனார் நான் மற்றும் எனது சகோதரி கிரையம் கொடுத்த பிரதிவாதி பெயரில் உள்ள பத்திரத்திலும் வழக்கிடை சொத்து பொதுப்பாதை என குறிப்பாக சொல்லப்பட்டுள்ளது என்றால் நான்குமால் மட்டும் தவறுதலாக உள்ளது. நான்குமால் தவறுதலாக உள்ளது என்று பிராதிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ குறிப்பிடவில்லை என்றால் குறிப்பிட்டுள்ளேன். 1966ம் ஆண்டு பத்திரம் பற்றியோ பிரதிவாதியின் முன்பாத்தியஸ்தர்களின் பத்திரம்

பற்றியோ பிராதிலோ, நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

13. நான் எனது தகப்பனாரிடம் கொடுத்த 1966 கிரைய பத்திரத்திலும் ரத்தனசாமி கொடுத்த பவர் பத்திரத்திலும் புஸ்பலீலாவதி கிரையம் பெற்ற பத்திரத்திலும் புஸ்பலீலாவதி பிரதிவாதி தானம் கொடுத்த தான செட்டில்மெண்டு பத்திரத்திலும் வழக்கிடை சொத்தான பொதுப்பாதை என குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது, அதனை தெரிந்துகொண்ட காரணத்தினால் மேற்படி பத்திரத்தை பற்றி பிராதிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ கூறவில்லை என்றால் சரியல்ல.

14. வழக்கிடை சொத்தானது 1966ம் வருடம் முதல் பொது பாதையாகத்தான் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. 1966ம் ஆண்டு முதல் 2010ம் ஆண்டு வரை பொது பாதையாகத்தான் உபயோகித்து வந்தார்கள் என்றால் சரியல்ல. 1966ம் வருடம் எனது தகப்பனார் வழக்கிடை சொத்தை பொது பாதையாக பிரித்து கொடுத்து தற்போது 2010ம் வருடம் பொது பாதை இல்லை என கூறுவது காலவரையரை தோசத்திற்கு உட்பட்டது என்றால் சரியல்ல.

15. சுமார் 44 வருடங்கள் கழித்து இவ்வழக்கை தாக்கல் செய்திருப்பது காலவரை தோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றும் மேற்படி வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள கிஸ்தி ரசீது வா.சா.ஆ. 2, 7 மற்றும் வா.சா.ஆ. 8 ஆவணங்களின் படி பட்டா எண்.2981 ற்குரிய என்றால் சரிதான். பட்டா எண்.2981 யை தாக்கல் செய்தால்தான் பட்டா யாருடைய பெயரில் இருந்தது என்பது தெரியவரும் என்றால் சரிதான்.

16. மேற்படி பட்டா கூட்டுப்பட்டாவாக இருந்தால் கூட்டுப்பட்டாவில் பெயரில் உள்ள யாரும் நிலவரி செலுத்தலாம் என்றால் தெரியாது. பட்டா எண்.2981 பல பேர் அடைங்கிய கூட்டுப்பட்டாவா இருப்பதால்தான் அப்பட்டாவை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

முடிவடையும் நேரம்: 05.06PM.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை

தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி

அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்

கையொப்பமிட்டார்.

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),

திருமங்கலம்.